# திருப்பூர் மாவட்டத்தில் காலியாக உள்ள இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு

# இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல்!









திருப்பூர் மாவட்டத்தில் காலியாக உள்ள இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு, விண்ணப்பித்திருந்தவர்களை மாநில துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் முன்னிலையில் கழக இளைஞர் அணி செயலாளர்– துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.08.2025) நேர்காணல் செய்தார். மேலும் அவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்து, கொண்டுவந்திருந்த புகைப்படத் தொகுப்பு– மினிட் புத்தகம் ஆகியவற்றை ஆய்வு செய்து, பணி சிறக்க வாழ்த்தினார். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரம் அடங்கிய அறிவிப்பு விரைவில் முரசொலியில் வெளியாகவுள்ளது.

### மாவட்டக் கழகத்தினர் ஒன்றிணைந்து செயல்பட்டு

## சேலம் மத்திய மாவட்டத்தில் உறுப்பினர் சேர்க்கையை விரைவாக முடித்திடுவீர்!

### மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் இரா.இராஜேந்திரன் சிறப்புரை!

சேலம், ஆக. 29-

சேலம் மத்திய மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 27.08.2025 புதன்கிழமை காலை 10.30மணிக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ஜி.கே.சுபாசு தலைமையில் மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் மாளிகை" யில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தீர்மானம் : 1

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் திருமிகு. மு.க.முத்து அவர்களின் மறைவுக்கு இக்கூட்டம் இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் : 2

50 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரர், எமர்ஜென்சியில் சிறை சென்று சொல்லொனா துயரத்திற்கு ஆட்பட்டு, 2 கோடிக்கும் மேற்பட்ட தொண்டர்களை வழிநடத்தும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களை ஒருமையிலும், மரியாதை குறைவாகவும் பேசி வருகின்ற அடிப்படை அரசியல் அறிவற்ற பழனிச்சாமிக்கு இக்கூட்டம் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது.

தீர்மானம் : 3

சேலம் மத்திய மாவட்டத்தில் "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கையில் 40% இலக்கை நிர்ணயித்த கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளை சிரம் மேற்கொண்டு, பலமுறை மாவட்டம் முழுவதும் பல்வேறு பணிகளுக்கு இடையில் சுழன்று - சுழன்று, கழகத் தோழர்களையும், முன்னோடி களையும் சந்தித்து வேகப்படுத்தி, உற்சாகப்படுத்தி ஏறத்தாழ எல்லா பூக்களிலும் 50% மேல் உறுப்பினர் சேர்க்கையை விரைவாக முடித்து மாநிலத்தில் முதல் 5மாவட்டங்களில் ஒன்றாக நம் மத்திய மாவட்ட கழகத்தை பெருமைப்பட செய்த மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களின் பணியை பாராட்டுவதுடன், அதற்கு உறுதுணையாக இருந்த கழகத்தின் அனைத்து நிர்வாகிகளையும், BDA, BLA2 மற்றும் BLCகளையும், கழக முன்னோடிகளையும் மாவட்ட கழகம் வெகுவாக பாராட்டுவதுடன் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும் கழகத் தலைவர் மற்றும் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலை மனமார ஏற்று தொடர்ந்து பொதுமக்களை சந்தித்து கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சென்று கழகத் தலைவர் அவர்களின் வெற்றி இலக்கான 200 தொகுதிகளை வென்றெடுத்திட நம் மத்திய மாவட்டத்தில் முழு மனதுடன் பாடுபடுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

### தஞ்சை மாவட்டம் – பசுபதிகோவில் ஊராட்சியில்

## "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் - பயனாளிகளுக்கு நலஉதவிகள்!

### மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

தஞ்சாவூர் ஆக.29.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், பசுபதிகோவில் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.

பசுபதி கோவில் ஆதித்யா திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்கள். தொடர்ந்து முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களிடம் "உங்களுடன் ஸ்டாலின் முகாமின் பயன்களை எடுத்தரைத்தார். பின்னர் முகாமில் மனு அளிக்க வந்த மாற்றுதிறனாளிடம் மனுக்களை பெற்றார். பின்னர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பாபநாசம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கோ. தாமரைச்செல்வன், தெற்கு ஒன்றியச் செயலாளர் க.நாசர், பாபநாசம் பேரூர் கழக செயலாளர் ச.கபிலன், மாவட்ட கழகப் பிரதிநிதி இராம.பிரபு, ஒன்றிய அவை தலைவர் இலசுமணி, ஒன்றிய துணை செயலாளர்கள் எல்.என். கருணாகரன், ப.கலியமூர்த்தி, மாவட்ட கழக பிரதிநிதி சிவ.மணிமாறன், மாவட்ட ஐ.டி.அமைப்பாளர் ராஜா.சீனிவாசன், மாவட்ட சிறுபான்மையினரின் நல உரிமை பிரிவு அணி அமைப்பாளர் பாவை. அனிபா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.எம். மணிகண்டன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கே.வினோத்குமார், மாவட்ட ஐ.டி விங் துணை ஒருங்கிணைப்பாளர் க.அருண்குமார், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் டி.எம்.முபாரக் ஹுசைன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எஸ். அறிவழகன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு துணைத் தலைவர் A.T.அன்சாரி, மாவட்ட தொண்டரணி துணைத் தலைவர் இஸ்மத் பாஷா, பாபநாசம் தெற்கு ஒன்றிய ஐடி.விங் மகா. அழகேசன் பிரவீன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் துரை. மணிமாறன்,ஜா. ஜெமில் மன்சூர், பேரூர் இளைஞரணி து.அமைப்பாளர் பாவை.கபிலன், பசுபதி கோவில் ஊராட்சி நிர்வாகிகள்: ஜான்சன், பிரான்சிஸ் ராஜா, பாபி சுதாகர்,சபரி கிரிவாசன், மற்றும் மாவட்ட, ஒன்றிய,பேரூர், ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர்

## ம.இராசேந்திரன் தலைமையில் சொல் புதிது - 4வது கூட்டம்!

சென்னை, ஆக. 29 -

தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் மேனாள் துணை வேந்தர் ம. இராசேந்திரன் தலைமையில் 26.08.2025 முற்பகல் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகக் கூட்டத்தில் சொல் புதிது- 4 கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னைப் பல்கலைத் தமிழ்ப் பேராசிரியர்( ஓய்வு) வ. ஜெயதேவன், தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் (ஓய்வு) மு. இராமசாமி, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் நா. சந்திரசேகரன், சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சா. சரவணன், திறந்தநிலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் (ஓய்வு) பாரதி பாலன், தமிழ் இணையக் கல்விக்கழக முனைவர் அ.ஜேம்ஸ், விவேகானந்தர் கல்லூரிப் பேராசிரியர் ம. இளங்கோவன், அன்னை தெரசா பல்கலைக்கழகப் பேராசிரியர் தி. கமலி , உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் ஆ. மணவழகன், ஊடகத்துறையைச் சேர்ந்த நீரை. மகேந்திரன்,.ராஜ் கண்ணன், மு. முருகேசன் ஆகியோர் பங்களித்தனர்.

இக்கூட்டத்தில் ஏற்கப்பெற்ற சொற்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பெற்றுள்ளது.

வ. எண் ஆங்கிலம் தமிழ் வருமாறு-

1. Angiogram - குருதிநாளப் பதிவு
2- Approver - குற்ற ஏற்பாளர்
3 Bollywood - இந்தித் திரையுலகம்
4 Container/Tanker truck/lorry - கொள்கலன் உந்து
5 Department of Food Process Engineering- உணவுப் பொருள் பதனீட்டுப் பொறியியல் துறை
6 Department of Food Process Technology - உணவுப் பொருள் பதனீட்டுத் தொழில்நுட்பவியல் துறை
7. Department of Food Safety and Quality Assurance - உணவுப்பொருள் பாதுகாப்பு - தர உறுதிப்பாட்டியல் துறை
8. Department of Food Plant Operations, Incubation and Entrepreneurship - உணவுப் பொருள் ஆலைச் செயற்பாடு, வளர்த்தெடுப்பு -தொழில்முனைவுத் துறை
9. Department of Food Packaging and Storage Technology - உணவுப்பொருள் கட்டகம் - வைப்பகத் தொழில்நுட்பவியல் துறை
10 . Department of Food Business Management - உணவுப் பொருள் வணிக மேலாண்மையியல் துறை
11. Heroism - வீரப்பாடு/ வீரத்தனம்
12 - Hollywood - அமெரிக்கத் திரையுலகம்
13. Kollywood - தமிழ்த் திரையுலகம்
14. OTP - ஒருநேரக் கடவி
15. Parole - காலப்பிணை
16. Passive income - நிழல் வருமானம்
17. Patient - மருத்துவப் பயனாளி
18. Podcast - வலையொலி
19. Premium - உயர்தரம்/ சிறப்பு நிலை
20. Rowdyism - போக்கிலித்தனம்,
21. Smart card - திறன் அட்டை
22. Smart speaker - திறன் ஒலிபெருக்கி
23. Start up - புத்தாக்கம்
24. Stent - செய்நாளம்
25. Stylist - எழிலாக்குநர்
26 - Tatkal - உடனடி
27. Techpreneur - தொழில்நுட்ப முனைவோர்
28. Theme music - உரிப் பொருள்/கருப்பொருள் இசை
29. Theme park - பொருண்மைப் பூங்கா
30. Tips - தூண்டல்
31. Travelpreneur - பயணத் தொழில்முனைவோர்
32. Trending - பேசுபொருள்/போக்குநிலை
33. Trilemma - மும்முனை ஊசலாட்டம்
34 Tubeless tyre - காற்றறை வட்டை
35. Update - புதிதாக்கம்
36. Up-to-date - இற்றை நிலை
37. Valet parking - ஊர்தி நிறுத்த உதவி
38. Vibe coding - உணர்நிலைக் குறியாக்கம்
39. Validity - செல்லுபடி
40. Water bell - குடிநீர் மணி
41. WiFi - அருகலை



புதுக்கோட்டை மாவட்டம், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கத்தில், மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 26.08.2025 அன்று துவக்கி வைத்து முதலமைச்சர் மாநில இளைஞர் விருது பெற்ற திருமதி.அ.லாவண்யாவை கௌரவித்தார்கள். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் து.செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.


